தேவைப்படும் அளவிற்கு இனாமாக அரசுக்குக் கொடுக்க முன் வருகிறார்கள். இந்த வேலை ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம், கூவனூற்று கிராமம் நொச்சியாற்றின் குறுக்கே ஒரு குட்டையை அமைக்க பொதுப்பணித் துறையால் ஒரு திட்டம் போடப்பட்டது. அதற்காக தற்போதைய விலை வீதப்படி மதிப்பீடு ரூ. 1.01 இலட்சம் ஆகும். இத்திட்டத்தினால் 106.60 ஏக்கர் நிலம் பயன்பெறும். கூடுதல் உணவு உற்பத்தி 26.71 டன் என எதிர்பார்க்கப்படுகிறது. 1978-79ல் இத்திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கான ஒத்திசைவை வருவாய் வாரியம் கொடுக்கவில்லை. ஆனாலும் இவ்வரசு மீண்டும் பரிசீலித்து வருகிறது.

குமரி அணை.

*வினா எண் 415—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் சுசீந்திரம், தேரூர் ஆகிய பகுதிகளில் பாசனத்திற்காகக் கட்டப்பட்ட குமரி அணை பழுதடைந்து செப்பனிடப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள குமரி அணை 1970-ல் ஏற்பட்ட அதிக வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. அதனுடைய ஆயக்கட்டு நிலங்கள் பாதிக்கப்படாதவாறு தாற்காலிக வளைகரைகள் அமைக்கப்பட்டு பாசனம் பாதிக்காமல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) குமரி அணையை செப்பனிடுவதற்கு ரூ. 12.57 இலட்சத்திற்கு மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் நீர் வளம் அதிகமாக இருக்கிற காரணத்தினால், வேளாண்மைக்குப் பயன்படுத்துகிற நீர் போக எஞ்சிய நீர் கடலிலே வீணாக கலக்கின்ற சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அங்கே இருக்கிற அத்தனை அணைக்கட்டுகளும் தகுந்த அளவில் பராமரிக்கப்படுவதால் தண்ணீரை உரிய முறையிலே

1979 மார்ச் 15]

பாதுகாக்கமுடியும் என்ற காரணத்தால் இப்பொழுது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் மேற்கொண்டு இருக்கிற அணைகளைத் தகுந்த முறையிலே பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, மேற்கொண்டு அரசு பரிசீலனை செய்யும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் மரவள்ளி ஆலை

* வினா எண் 416—திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம் மணிமுக்தா நீர்ப்பாசன திட்டப்பகுதியில் ஒரு மரவள்ளி ஆலை ஆரம்பிக்க அனுமதி கோரி மனு ஏதேனும் வந்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம். திரு. இளங்கோவன் என்பவர் மரவள்ளி ஆலை நிறுவ, மரவள்ளிக்கிழங்கு மாவு தயாரிக்க தொழில் வணிகத் துறையில் சிறு தொழிலாகப் பதிவு செய்ய விண்ணப்பித்து இருந்தார்.

(ஆ) தொழில் வணிகத்துறை அவருடைய நிறுவனத்தை சிறு தொழிலாக தற்காலிக முறையில் பதிவு செய்து சான்றிதழ் வழங்கியிருந்தது. அச்சான்றிதழ் 6-5-1978 உடன் காலாவதியாகி விட்டது. அதைத் தொழில் முனைவோர் புதுப்பிக்கவில்லை.

எட்டயபுரம் மருத்துவ மனைக்கு புதிய கட்டடம்

* வினா எண் 417—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எட்டயபுரம் அரசினர் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் புதிய கட்டடம் கட்டும் வேலை எப்பொழுது துவங்கும் ?